தினமலர்
நிறுவனர்: டி. வி. ராமசுப்பையர்

**நிலையற்ற காபி கொட்டை விலை மார்க்கெட் மையம் அமைக்க கோரிக்கை**

தாண்டிக்குடி:காபி கொட்டை விலை ஏற்ற,இறக்கத்துடன் இருப்பதால் விவசாயிகள் அதனை விற்பனை செய்வதில் குழப்பம் ஏற்பட்டுள்ளது.திண்டுக்கல் மாவட்டம் தாண்டிக்குடியை சுற்றியுள்ள கீழ் பழநி மலைப்பகுதியில் காபி பயிர் செய் யப்பட்டுள்ளது. தற்போது அறுவடை காலம் முடியும் நிலையில் காபி கொட் டையை பதப்படுத்தி அதனை விற்பனை செய்வதில் விவசாயிகள் தீவிரம் காட்டி வருகின்றனர். கடந்த சில வாரங்களுக்கு முன் சர்வதேச மார்க்கெட் டில் காபி கொட்டை ஒரு கிலோ ரூ.140 க்கு விற்பனையானது. இந்நிலையில் இது படிப்படியாக குறைந்து ஏற்ற, இறக்கத்துடன் தற் போது ரூ.128க்கு விற்கப்படுகிறது.துவக்கத்தில் விலையேற்றம் இருந்ததால் மே லும் விலை உயர்வை எதிர்பார்த்து காபி கொட் டையை இருப்பு வைத்திருந்த விவசாயிகள்,விலை குறைவு காரணமாக ஏமாற்றமடைந்துள்ளனர். 35 ஆயிரம் ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள காபி விவசாயிகளை ஊக்கப்படுத்த மலைப் பகுதியை மையமாக கொண்ட மார்க்கெட் மையத்தை காபி வாரியம் துவக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்

**விவசாயிகள் கவனத்திற்கு**

தொப்பம்பட்டி:தோட்டக்கலை உதவி இயக்குனர்தங்கசாமி அறிக்கை: தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் மூலம் துல்லிய பண்ணைய சாகுபடி செயய குழுக்கள் அமைக்கப் பட்டுள்ளன. இக்குழுவில் ஆதிதிராவிட விவசாயிகளும் சேரலாம். இதில் சேரும் விவசாயிக்கு எக்டருக்கு ரூ. 48 ஆயிரத்து 640 மானியம் வழங்கப்படும். தகுதியுள்ள விவசாயிகள் தங்கள் பெயரை தொப்பம்பட்டி தோட்டக் கலை அலுவலகத்தில் பதிவு செய்யலாம். இவ் வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.

**கோபி பகுதியில் தர்பூசணி அறுவடை துவக்கம்: கடந்தாண்டை விட டன்னுக்கு ரூ.1,500 அதிகம்**

கோபிசெட்டிபாளையம்: கோடைக்காலம் தொடங்கும் முன்னரே கோபி மற்றும் சிறுவலூர் பகுதிகளில் தர்பூசணி அறுவடை தொடங்கியுள்ளது. கள்ளிப்பூச்சி தாக்குதலால் உற்பத்தி குறைந்த தர்பூசணிக்கு டன் ஒன்றுக்கு 1,500 ரூபாய் வரை அதிகமாக கிடைக்கிறது. இந்தியாவில் வழக்கமாக

மார்ச் முதல் மே வரை கடுமையான வெயில் இருக்கும். நடப்பாண்டில் நாட்டின் பல பகுதிகளில் 110 டிகிரியை வெயில் தாண்டக் கூடும் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். கோடைக்காலத்தில் மனித உடலுக்கு அதிகமாக தண்ணீர் தேவைப்படும். இதனால் வெள்ளரி, தர்பூசணி மற்றும் இளநீருக்கு நல்ல மவுசு ஏற்படும். இளநீரை பொறுத்தவரை ஆண்டு முழுவதும் கிடைக்கும். ஆனால் வெள்ளரி மற்றும் தர்பூசணி ஆகியவை சீஸன் காலத்தில் மட்டுமே கிடைக்கும். திண்டிவனம் உள்ளிட்ட வட தமிழகத்தில் தர்பூசணி அதிகளவில் பயிரிடப்படுகிறது. தமிழகத்தில் இருந்து வெளிநாடுகளுக்கு அதிகளவில் தர்பூசணி ஏற்றுமதி செய்யப் படுகிறது. ஈரோடு மாவட்டத்தில் ஆண்டு முழுவதும் தண்ணீர் வசதி கொண்ட கோபி, சிறுவலூர் பகுதிகளில் நடப்பாண்டு திகளவில் தர்பூசணி பயிரிடப்பட்டுள்ளது. கோடைக்காலம் துவங்க இன்னும் 20 நாட்கள் உள்ள நிலையில் தர்பூசணி அறுவடை கோபி மற்றும் சிறுவலூர் பகுதிகளில் தொடங்கியுள்ளது.சிறுவலூர் பகுதியை சேர்ந்த விவசாயிகள் ஈஸ்வரன், ரமேஷ் ஆகியோர் கூறியாவது: ஈரோடு மாவட்டத்தில் கடந்த ஐந்து ஆண்டுகளாகன் தர்பூசணி பயிரிடுவது அதிகரித்து வருகிறது. கோபி மற்றும் சிறுவலூர் பகுதிகளில் 100க்கும் மேற்பட்ட ஏக்கரில் தர்பூசணி பயிரிடப்பட்டு வருகிறது. தர்பூசணிக்கான விதைகள் திண்டிவனம் மற்றும் சென்னையில் கிடைக்கிறது. ஒரு கிலோ 5,000 முதல் 15 ஆயிரம் ரூபாய் வரை தர்பூசணி விதைகள் விற்பனை செய்யப்படுகிறது. வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய தர்பூசணி விதைகளுக்கு விலை அதிகம். ஒரு ஏக்கருக்கு 350 கிராம் தர்பூசணி தேவையாக உள்ளது. தர்பூசணி சாகுபடிக்கு குறைந்தளவு தண்ணீர் இருந்தால் போதும். ஒரு ஏக்கருக்கு 15 முதல் 20 டன் வரை தர்பூசணி மகசூல் கிடைக்கும். நடப்பாண்டு கள்ளிப்பூச்சி தாக்குதலால் தர்பூசணி உற்பத்தி வெகுவாக குறைந்துள்ளது. இதனால் ஒரு டன் தர்பூசணி 5,000 ரூபாய் வரை விற்கப்படுகிறது. சென்றாண்டு அதிகப்பட்சமாக 3,500 வரை விற்றது. கோடைக்காலம் தொடங்கும் பட்சத்தில் தர்பூசணி பழத்துக்கு இன்னும் அதிகரிக்கவும் வாய்ப்புள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

### பயிரில் நோய் தாக்குதலை இயற்கையாக தடுக்கும் சூடோமோனாஸ்

ஈரோடு: இயற்கை வேளாண்மையில், பூச்சி தாக்குல் மற்றும் நோய்களை உயிரியல் முறையில் சூடோமோனாஸ் கட்டுப்படுத்துகிறது என ஈரோடு வேளாண் இணை இயக்குனர் கோபால் கூறினார். அவர் கூறியதாவது: இன்றைய வேளாண்மையில், ரசாயன முறையில் பூச்சி மற்றும் பூஞ்சாணக் கொல்லிகளை அதிகளவில் பயன்படுத்துவதால் சுற்றுச்சூழல் மாசுபடுகிறது. பூச்சிகள் மற்றும் நோய் காரணிகளின் எதிர்ப்பு சக்தி தோன்ற வழி வகுக்கிறது. சுற்றுப்புற சூழலுக்கு ஏற்புடைய ஒருங்கிணைந்த பயிர்பாதுகாப்பு முறையில் உயிரியல் கட்டுப்பாட்டு முறைகளில்

சூடோமோனாஸ் முக்கிய பங்கு வகிக்கிறது. சூடோமோனாஸ் ப்ளோரசனஸ் மண்ணின் மூலம் பரவும் நோய்களான வேரழுகல், வாடல்நோய், நாற்றழுகல் நோய், குண்டான்தடி வீக்க வேர் நோய் போன்றவற்றை கட்டுப்படுத்தும். இலை வழியில் பரவும் பூசண நோய்களான குலைநோய், இலையுறை கருகல் நோய், இலைபுள்ளி நோய் மற்றும் ஆனந்த்ராக்னோஸ் ஆகியவற்றின் பாதிப்பையும் குறைக்கிறது.நெல்லில் இலைச்சுருட்டு புழு, தண்டு துளைப்பான், வாழையில் வேர் குடையும் நூற்புழு, காய்கறிகளில் வேர் முடிச்சு, நூற்புழு ஆகியவற்றால் ஏற்படும் பாதிப்பை குறைக்கிறது. நெல்லில் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறையில், விதை நேர்த்தி செய்ய ஒரு கிலோ விதைக்கு பத்து கிராம் சூடோமோனாஸ் கலவை என்ற விகிதத்தில் கலந்து தேவையான அளவு தண்ணீரில் இரவு முழுவதும் ஊற வைத்து பின்னர் தண்ணீரை வடிக்க வேண்டும். வடித்த தண்ணீரை நாற்றாங்காலில் ஊற்றவேண்டும். நாற்று நனைக்கும்போது, சூடோமோனாஸ் பாக்டீரியா கலவை 2.5 கிலோ பை 25 சதுர மீட்டர் நாற்றங்காலில் உள்ள தண்ணீரில் கலந்து, பின்னர் ஒரு ஹெக்டேருக்கு தேவையான நாற்றுகளை குறைந்தது அரைமணி நேரம் ஊற வைத்து நட வேண்டும். வயலில் இடும்போது, நாற்று நட்ட 30 நாட்கள் கழித்து ஹெக்டேருக்கு 2.5 கிலோ சூடோமோனஸில் பாக்டீரியா கலவையை 50 கிலோ நன்கு மக்கிய சாண எரு அல்லது மணலுடன் கலந்து இட வேண்டும்.தெளிப்பு முறையில், சூடோமோனஸ் பாக்டீரியா கலவை 0.5சத கரைசலை நடவுக்கு பின்னர் 45 நாட்கள் கழித்து நோய்களின் தீவிரத்தை பொறுத்து பத்து நாட்கள் இடைவெளியில் மூன்று முறை தெளிக்க வேண்டும். ராகி குலைநோய் தெளிப்பு முறையில், சூடோமோனஸ் பாக்டீரியா கலவையை 0.2 சத கரைசலை நோயின்தீவிரத்தை பொறுத்து பத்து நாட்கள் இடைவெளியில் மூன்று முறை தெளிக்க வேண்டும். நிலக்கடலை, எள், சூரியகாந்தி, பருத்தி, பயிர்வகைப் பயிர்கள் மற்றும் காய்கறி பயிர்களின் வேரழுகல், வாடல் நோய் கட்டுப்படுத்தவும், வாழை வாடல் நோய் மற்றும் பழ அழுகல் ஒரு ஹெக்டேருக்கு 2.5 கிலோ சூடோமோனஸ் கலவையை 50கிலோ நன்கு மக்கிய சாண எரு அல்லது ணலுடன் கலந்து விதைப்பதுக்கு முன்பு தெளிக்க வேண்டும். வாழைத்தாரில் தெளித்தல், 0.5 சதவீத சூடோமோனஸ் பாக்டீரியா கலவையை கடைசி வாழைத்தார் வெளிவந்த பின்னர் தெளிக்க வேண்டும். மாம்பழத்தில் ஆனந்த்ரக்னோஸ் பழ அழுகல் நோய்க்கு, 0.5சதவீத சூடோமோனாஸ் பாக்டீரியா கலவையை காய்பிடித்த 15 நாட்கள் கழித்து தெளிக்க வேண்டும். இது போன்று 30 நாட்களுக்கு ஒரு முறை என்ற அளவில் அறுவடை வரை தெளிக்க வேண்டும். இந்த பாக்டீரியா கலவையை பூசண கொல்லிகள் மற்றும் பூச்சிகொல்லி மருந்துகளுடன் கலக்க கூடாது. விவசாயிகள் தங்கள் தேவைக்கு அருகில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் சூடோமோனாஸ் பாக்டீரியா கலவையை பெற்று பயன்படுத்தலாம். இவ்வாறு அவர் கூறினார்.

**பவானிசாகரில் விவசாயிகளுக்கு நல சங்கம்**

ஈரோடு: பவானிசாகர் அருகே தமிழ்நாடு அரசு தோட்டக்கலைத்துறையினர் சார்பில், நாகதேவி தோட்டக்கலை துல்லிய பண்ணை திட்ட விவசாயிகளுக்கு நல சங்க குழு அமைக்கப்பட்டது. சத்தியமங்கலம் தாலுகா, பவானிசாகர் அருகே காராப்பட்டி பஞ்சாயத்துக்குட்பட்ட மாரம்பாளையம் புதூரில் உள்ள விவசாயிகள் அனைவரும் ஒன்று கூடி தமிழ்நாடு அரசு தோட்டக்கலைதுறையினரால், நலச்சங்கம் என்ற குழு அமைக்கப்பட்டது.இயக்குனர் கணேசமூர்த்தி, உத்திரவின்படி, தோட்டக்கலை அலுவலர் சந்தியா, உதவி வேளாண் அலுவலர் அருள்ஞானமணி ஆகியோர் 16 பொது விவசாயிகளையும், நான்கு தாழ்த்தப்பட்ட விவசாயிகளையும் தேர்வு செய்து, இந்த விவசாயிகளுக்கு அரசின் திட்டங்களை எடுத்து கூறி, மானியத்துடன் கூடிய வங்கி கடன் உதவி பெற்று விவசாயிகளின் விருபத்துக்கு ஏற்ப,தோட்டக்கலை பயிரை பயிர் செய்ய உள்ளனர். காராப்பாடி கூட்டுறவு வங்கி கடன் வழங்க முன்வந்துள்ளது. இதன்படி, தோட்டக்கலை பயிர்களுக்கு தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தும் வகையில், மெஹா மற்றும் அக்ரோபிளஸ் கம்பெனிகள் சொட்டுநீர் பாசனம் அமைத்து கொடுக்க ஏற்பாடு செய்துள்ளது. ஈரோடு கலெக்டர் மற்றும் தோட்டக்கலை இயக்குனர் மேற்பார்வையில், இத்திட்டம் செயல்பட்டு வருகிறது. இத்தகவலை நலச்சங்க குழு தலைவர் தங்கராஜ் கூறினார்.

**வேளாண் பொருட்களுக்கு வரிவிலக்கு தேவை**

விலைவாசி "விர்...' என்று ஏறிக்கொண்டிருக்கிறது. தங்கம் விலை விண்ணை தொடுகிறது. பங்குச்சந்தையில் ஏற்ற இறக்கம் நிலவுகிறது. பெட்ரோல் விலை உயரும் என்ற பீதி வேறு. இந்நிலையில், வரும் நிதி ஆண்டிற்கான மத்திய பொது பட்ஜெட்டை, பிப்.,26 ல் நிதியமைச்சர் பிரணாப்முகர்ஜி தாக்கல் செய்யவிருக்கிறார். அதில், "பொருளாதார மற்றும் நிதிச்சீர்த்திருத்தங்கள் குறித்த புதிய அறிவிப்புகள் வெளியிடப்படுமா' என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ள நிலையில், "எப்படி மத்திய பட்ஜெட் அமைய வேண்டும்,' என்பது குறித்து பல்வேறு அமைப்பினர் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

தமிழ்நாடு தொழில் வர்த்தக சங்கத் தலைவர் ஜெகதீசன் கூறியதாவது : நடுத்தர, குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு ஆண்டு வருமான வரம்பு 3 லட்சம் ரூபாயாக உயர்த்த வேண்டும். மூன்று லட்சம் ரூபாய் முதல் ஏழு லட்சம் ரூபாய் வரை வருமானம் உள்ளோருக்கு 10 சதவீத வரியும், 10 லட்சம் ரூபாய் வரை 20 சதவீத வரியும், அதற்கு மேல் 25 சதவீத வரியும் நிர்ணயிக்க வேண்டும்.

புதிய நேரடி வரி, மொத்த சொத்து மதிப்பின் அடிப்படையில் விதிக்கப்படுவதால், கம்பெனிகள் பாதிக்கும். குறைந்தபட்ச மாற்று வரியை செலுத்த வேண்டிய கட்டாயம் ஏற்படும். இதை தவிர்க்க, குறைந்தபட்ச மாற்றுவரி முறை மறுபரிசீலனை செய்ய வேண்டும். கம்பெனிகளுக்கான வருமான வரி விகிதம், பங்குதாரர் நிறுவனங்களுக்கு 25 சதவீதமாக குறைக்க வேண்டும். ஓய்வு பெற்றவர்கள் தங்கள் முதலீடுகளை திரும்ப பெறும்போது, விதிக்கப்படவுள்ள வரி முற்றிலும் நீக்க வேண்டும். சரக்கு மற்றும் சேவை வரி ஏப்.,1 முதல் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். அதில், வரிஏய்ப்பை முற்றிலுமாக தவிர்க்க, மத்திய, மாநில அளவில் விதிக்கப்படும் மொத்த வரி விகிதம் 10 சதவீதத்திற்குள் இருக்க வேண்டும். வேளாண் பொருட்களுக்கு வரிவிலக்கு அளிக்க வேண்டும். நாடு முழுவதும் வரிவிலக்குகள் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும். சிறுவணிகர்கள், தொழிலதிபர்கள், சேவை செய்பவர்களுக்கு வரிவிலக்கு வரம்பு 50 லட்சமாக நிர்ணயிக்க வேண்டும். பகுதி இயந்திர முறையில் தயாரிக்கும் தீப்பெட்டிகளுக்கு "சென்வாட்' வரி விலக்கு அளிக்க வேண்டும். தீக்குச்சி தயாரிக்க பயன்படும் மூலப்பொருட்களான மாட்ச் ஸ்பிலிண்ட் தட்டுப்பாடு காரணமாக, அதன் மீதான சுங்கவரி முழுமையாக நீக்க வேண்டும், என்றார்.

**மானியத்தில் விதை, கைத்தெளிப்பான் பயன்பெற விவசாயிகளுக்கு அழைப்பு**

வேதாரண்யம்: வேதாரண்யம் பகுதியில் மான்யத்தில் பயிர்வகை விதைகள் மற்றும் கைத்தெளிப்பான்கள் விநியோகிக்கப்படுவதாக கோட்ட வேளாண்மை உதவி இயக்குனர் மணிகண்டன் தெரிவித்தார். வேதாரண்யம் வட்டாரத்தில் தேசிய உணவு பாதுகாப்புத் திட்டம் மற்றும் பயிறுவகை திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு ஒரு கிலோவுக்கு 20 ரூபாய் மான்யத்துடனும், விதை கிராமத் திட்டத்தின் கீழ் 50 சதவீத மான்யத்துடன் தரமான சான்று பெற்ற விதைகள் வேதாரண்யம் கோட்டத்தில் உள்ள வாய்மேடு, கரியாப்பட்டிணம், வேதாரண்யம் விரிவாக்க மையங்கள் மூலம் டி9 என்னும் உளுந்து விநியோகம் செய்யப்படுகின்றன. 65 நாள் வயதுடைய இந்த ரகமானது மானாவரி பயிராகவும், இறவையிலும் பயிரிட உகந்தது. ஹெக்டேருக்கு ஒரு டன் வரை மகசூல் தரும். ஏக்கருக்கு எட்டு கிலோ விதை நேர்த்தி செய்து பயன்படுத்த வேண்டும். ஏக்கருக்கு ஒரு பாக்கெட் ரைஸோப்பியம் ஆகியவற்றை தேவையான விதையுடன் கலந்து ஆறிய கஞ்சியில் விதை நேர்த்தி செய்து தெளிக்க வேண்டும். வேதாரண்யம் பகுதியில் தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் தரச்சான்று பெற்ற 13 லிட்டர் கொள்ளளவு உள்ள கைத்தெளிப்பான் விலை ரூபாய் ஆயிரத்து 850. இதில் 800 ரூபாய் மான்யத்துடன் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. இவ்வாறு வேளாண் உதவி இயக்குனர் மணிகண்டன் தெரிவித்தார்.

**உழவன் உணவகத்தில் 'ஐஸ்கிரீம்' விற்பனை**

நாமக்கல்: உழவர் சந்தை உணவகம் மக்களிடையே அதிக வரவேற்பை பெற்றுள்ள நிலையில், அதில் ஐஸ்கிரீம் விற்பனையும் துவங்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் நாமக்கல் மாவட்டத்தில் முதல் முதலாக கடந்த ஆண்டு செப்டம்பர் 14ம் தேதி உழவர்களின் உணவகம் திறக்கப்பட்டது. உழவர் வருமானத்தை பெருக்க ஏதாவது செய்ய வேண்டும் என்ற அடிப்படையில், மதிப்பூட்டப்பட்ட பொருட்கள் உற்பத்தி செய்ய திட்டம் வகுத்து தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயிகளுக்கு பயிற்சியும் அளிக்கப்பட்டது. பால், தயிர், மோர், நெய் மற்றும் பால்கோவா பொருள் தயாரித்து விற்பனை துவங்கப்பட்டது. துவங்கப்பட்ட 15 நிமிடங்களில் அனைத்தும் விற்பனையானது என்பது குறிப்பிடத்தக்கது.நகர்ப்புறத்தில் வாழும் மக்கள் மற்றும் நுகர்வோர் கிராமப்புறத்தில் விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருட்கள் தரமானதாகவும், கலப்படம் இல்லாமலும் இருக்கும் என்பதால், அவற்றுக்கு ஆதரவு அதிகரித்து வருகிறது. அத்தகைய விவசாயிகளின் வாழ்க்கை மேம்படுத்தும் வகையில், மாலை நேரத்தில் உழவர் சந்தையில், உழவர்களின் உணவகம் திறக்கப்பட்டது. கலெக்டர் தலைமையில் நடந்த திறப்பு விழாவில், மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை இணை அமைச்சர் காந்திச்செல்வன் உணவகத்தை திறந்து வைத்தார்.துவங்கப்பட்ட நாளில் மட்டும் 20 ஆயிரம் ரூபாய்க்கும் அதிகமாக விற்பனையானது என்பது குறிப்பிடத்தக்கது. இங்கு இட்லி, தோசை, சோளசாதம், சாமை சாதம், தினை சாதம், கம்மங்கூழ், கேழ்வரகு கழி, பக்கோடா, பாசிபயிறு உருண்டை, சுண்டல், வடை, ஆட்டுக்கால் கிழங்கு மூலிகை சூப், காய்கறி சூப், உளுந்தங்கஞ்சி உள்ளிட்ட பல்வேறு பொருட்கள் தயார் செய்து விற்பனை செய்யப்படுகிறது. மாலை வேளையில் உணவகம் திறக்கப்படுவதால், நாள்தோறும் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. பெற்றோர் தங்கள் குழந்தைகளுடன் வந்து, இட்லி, பனையாரம், உளுந்தங்கஞ்சி, கழி, சோளப்பனையாரம் போன்ற உணவு வகைகளை வாங்கி உண்ணுகின்றனர்.அதனால், நாளுக்கு நாள் உணவு பொருட்களின் விற்பனை அதிகரித்து வருகிறது. இதுவரை 35 லட்சம் ரூபாய்க்கும் மேல் விற்பனையாகி உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இங்கு விற்பனை செய்யப்படும் உணவு வகைகள் அனைத்தும் சுவையாகவும், தரமானதாகவும், சுத்தமாகவும் விற்பனை செய்வதால், பெருமளவில் வந்து ருசிபார்க்கின்றனர். இந்த உழவன் உணவகம் மக்களிடையே மிகுந்த வரவேற்பை பெற்றள்ளது. இந்நிலையில் உழவன் உணவகத்தில் முன்னோடி வங்கியான இந்தியன் வங்கியின் மூலம் பாரத பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ், 1.38 லட்சம் ரூபாய் மதிப்பில் இயற்கை முறையில் ஐஸ்கிரீம் தயாரிக்கும் இயந்திரம் அமைக்கப்பட்டது. அதன் துவக்க விழாவில், கலெக்டர் சகாயம் தலைமை வகித்து விற்பனையை துவக்கி வைத்தார். இந்தியன் வங்கி ஏ.ஜி.எம்., மகாதேவன், முதன்மை

மேலாளர் ராமசாமி, முன்னோடி வங்கி மேலாளர் சுரேஷ், கால்நடை மருத்துவ கல்லூரி முதல்வர் சந்திரஹாசன், கே.வி.கே., ஒருங்கிணைப்பாளர் மோகன், எம்.எல்.ஏ., ராஜேந்திரன், ஆத்ம திட்ட துணைத்தலைவர் கணேசன் உள்பட பலர் பங்கேற்றனர்.

**ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு கருத்தரங்கு**

பெரம்பலூர் : தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், அன்பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் பயிர்பாதுகாப்பு துறை சார்பில் வெங்காயப்பயிரில் ஒருங்கிணைந்த பயிர்பாதுகாப்பு குறித்த கருத்தரங்கம் பெரம்பலூர் மாவட்டம் இரூர் கிராமத்தில் நடந்தது.கருத்தரங்கிற்கு வேளாண் கல்லூரி முதல்வர் கதிரேசன் தலைமை வகித்தார். தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக பயிர் பாதுகாப்பு மைய இயக்குநர் ஜோனத்தன் சிறப்புரையாற்றினார். வெர்ஜீனியா பல்கலைக்கழகத்தின் திட்ட இயக்குநர் முனியப்பன் வெங்காயப்பயிரில் ஒருங்கிணைந்த பயிர்பாதுகாப்பு குறித்த விளக்க கையேட்டை வெளியிட்டார். கருத்தரங்கில் வேளாண் கல்லூரி பயிர் பாதுகாப்புத்துறை தலைவர் கஜேந்திரன், பயிர் நோயியல் பேராசிரியர் தினகரன் ஆகியோர் வெங்காயப்பயிரை தாக்கும் பூச்சிகள் மற்றும் நோய்கள் குறித்தும், அவற்றை ஒருங்கிணைந்த முறையில் கட்டுப்படுத்தும் முறைகள் பற்றியும் விவசாயிகளுக்கு விளக்கமளித்தனர். மாவட்ட வேளாண் துணை இயக்குநர் சிவகுமார் உட்பட பலர் பேசினர். மேலும் வெர்ஜீனியா டெக் பல்கலைக்கழக பேராசிரியர்கள் எட்ராஜோட், டக் பயிப்பர் மற்றும் சாலிமில்லர் ஆகியோர் கலந்துகொண்டு விவசாயிகளிடம் தமிழக சூழலில் வெங்காய பயிர் சாகுபடி எதிர் கொள்ளும் பூச்சி மற்றும் நோய் தாக்குதல்கள் குறித்து கேட்டறிந்தனர்.கருத்தரங்கில் 200க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துகொண்டு வெங்காய சாகுபடி குறித்த சந்தேகங்களுக்கு விளக்கங்களை கேட்டறிந்தனர். முடிவில் பூச்சியியல் மற்றும் உயிரி தொழில்நுட்ப பேராசிரியர் மோகன் குமார் நன்றிகூறினார். நிகழ்ச்சி ஏற்பாடுகளை வேளாண் கல்லூரி பயிர் பாதுகாப்புத்துறை உதவிப்பேராசிரியர்கள் சந்திரசேகரன், சாமிநாதன், மதியழகன் மற்றும் செந்தமிழ், இணை பேராசிரியர் திருவுடைநம்பி, பசுபதி, பேராசிரியர்கள் ராஜேந்திரன், ராஜீ ஆகியோர் செய்திருந்தனர்.

**பனைக்குளம் பகுதியில் நெல் அறுவடை : சேலம்,நாமக்கல் இயந்திரங்கள் வருகை**

பனைக்குளம் : பனைக்குளம் பகுதியில் சேலம்,நாமக்கல்லில் இருந்து வரவழைக்கப் பட்ட இயந்திரங்கள் மூலம் நெல் மற்றும் சாவி அறுவடை பணி நடந்து வருகிறது.

மண்டபம் ஒன்றியத்தில் நடப்பாண்டில் 2000க்கும் அதிகமான எக்டேரில் நெல் சாகுபடி செய்தனர்.தாமதமாக பெய்த மழையால் ஏராளமான விவசாயிகள் பாதிக்கப் பட்டு, சாவியை அறுவடை செய்து, வைக்கோலை சேகரிக்கின்றனர். பலருக்கு மகசூல் அமோகமாக உள்ளது. நெற்பயிர்,சாவிகளைஅறுவடை செய்ய ஆட்கள் கிடைக்காமல், இயந்திரம் மூலம் பணி துவங்கி உள்ளது. இதற்காக சேலம், நாமக்கல்,ஆத்தூர் பகுதிகளிலிருந்து ஆறு அறுவடை இயந்திரங்கள் வந்துள்ளன.

ராமச்சந்திரன்(உடைச்சியார் வலசை) கூறுகையில்,"" வேலை உறுதியளிப்பு திட்டத்திற்கு செல்வதால் ஆட்கள் கிடைக்கவில்லை. இயந்திரத்தை பயன்படுத்தி அறுவடை செய்கிறோம்," என்றார்.காளிங்க ராயன் (வாலாந்தரவை)கூறுகையில்,"" இயந்திர பயன் பாட்டால் குறிப்பிட்ட நேரத்திற்குள் பணியை முடித்து விடுகிறோம்.இதனால் எவ்வித கூடுதல் செலவும் கிடையாது.நடப்பாண்டில் விவசாயிகள் பெருமளவில் நெல் விவசாயத்தில் பாதிக்கப்பட்டுள்ளனர்," என்றார்.இயந்திர நிர்வாகி சசிக்குமார் (நாமக்கல்)கூறியதாவது: நாள் தோறும் ஆறு மணி நேரம் இயந்திரத்தை பயன்படுத்துகிறோம்.ஒரு மாதம் இந்த பகுதியில் தங்கி அறுவடை பணிகளை செய்ய உள்ளோம்.ஒரு ஏக்கர் அறுவடை செய்ய ஒரு மணி நேரம் பிடிக்கும். மழை இல்லாததால் நடப்பாண்டில் தொழில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. ஆண்டுக்கு ஆறு மாதம் கூட தொழில் கிடைப்பதில்லை . இங்கு பணி முடிந்ததும் திருநெல்வேலி செல்ல உள்ளோம், என்றார்.

**நெற்பயிருக்கு இழப்பீடு: ஒன்றிய கூட்டத்தில் தீர்மானம்**

தேவகோட்டை : குலை நோயால் பாதிக்கப்பட்ட நெல் விவசாயிகளுக்கு, இழப்பீடு வழங்க கோரி, தேவகோட்டை ஊராட்சி ஒன்றிய கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. தலைவர் வள்ளுவன் தலைமையில் கூட்டம் நடந்தது. துணை தலைவர் ராமலிங்கம், பி.டி.ஒ., க்கள் சித்ரா, பரமசிவம் முன்னிலை வகித்தனர்.விவாதங்கள் வருமாறு:

ராமலிங்கம்: நெற்பயிரில் குலைநோய் தாக்கி, விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க கோரி, கலெக்டருக்கு தீர்மானம் அனுப்ப வேண்டும்.

நடராஜன் (காங்.,): எழுவங்கோட்டை பாலம் அமைக்கும் பணி, பல ஆண்டாக கிடப்பில் உள்ளது. ஒவ்வொரு கூட்டத்திலும் கூறுகிறோம். ஆனால் அதிகாரிகள் செய்வதாக இல்லை.

பொறியாளர் சிவராமன்: பணியை செய்யக்கூடாது என உதவி பொறியாளர் பரிந்துரைத்துள்ளார்.தலைவர்: புதிய தீர்மானம் நிறைவேற்றலாம் என ஆலோசனை கூறப்பட்டது. ஆனால் அதை கேட்பதாகா இல்லை. தென்னீர்வயல் கிராமத்திலும் பணி நிறுத்தப்பட்டுள்ளது.

செந்தில்நாதன் (அ.தி.மு.க.,): செயற்பொறியாளர் அனுமதி வழங்கிய பின், பணியை ரத்து செய்ய

உதவி பொறியாளருக்கு அதிகாரம் உள்ளதா? கட்டுமான பொருட்களின் விலையும் உயர்ந்து வருகிறது. இப்பிரச்னையில் உதவி இயக்குனர் (ஊராட்சி) மீது கண்டன தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்.(இதை அனைவரும் ஆதரித்தனர். கண்டன தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.)
ஹைருன்னிஷாபேகம் (காங்.,): புளியாலில் குடிநீர் குழாய்கள் பழுதாகிவிட்டன. சீர் செய்யும் வரை லாரிகள் மூலம், குடிநீர் வழங்க வேண்டும். கொசு தொல்லையால், வைரஸ் காய்ச்சல் பரவுகிறது. துப்புரவு பணியாளர்கள், கொசு மருந்து அடிப்பதில்லை.
தலைவர்: அனைத்து பகுதிகளிலும் கொசு மருந்து அடிக்க, உடனே ஏற்பாடு செய்யுங்கள்.செந்தில்நாதன்: நடப்பு ஆண்டில் நெல் விளைச்சல் இல்லை. ஆழ்துளை மூலம் விளைந்த பகுதிகளை கணக்கிட்டு, விவசாய அதிகாரிகள் அறிக்கை அனுப்புகின்றனர். அனைத்து பகுதியிலும் ஆய்வு நடத்த வேண்டும்.சிறு மின்விசை திட்டத்தில், குடிநீர் தொட்டிகள் பழுதடைந்துள்ளன. சீரமைத்தால் பெண்கள் பயன்பெறுவர். இப்பகுதியில் நெல் கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டும். இவ்வாறு விவாதம் நடந்தது.நெற்பயிருக்கு இழப்பீடு வழங்க கோரி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**விவசாயிகள், கிராமப்புறக் குழுக்களுக்கான நுகர்வோர் பாதுகாப்பு, விழிப்புணர்வு பயிற்சி**

தஞ்சாவூர்: தஞ்சாவூரில் விவசாயிகள், கிராமப்புறக் குழுக்களுக்கான நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு பயிற்சி நடந்தது. மத்திய அரசின் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, தமிழக அரசின் உணவு பொருட்கள் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை சார்பில் ஆண்டு தோறும் நுகர்வோர் சட்ட விழிப்புணர்வு பயிற்சிகள் நடத்தப்படுகிறது. கடந்தாண்டு தமிழகம் முழுவதும் மகளிர் குழுக்களுக்காக பல இடங்களில் நுகர்வோர் சட்ட விழிப்புணர்வு பயிற்சிகள் நடந்தது. இந்தாண்டு விவசாயிகளும் ஒரு நுகர்வோர்களே என்ற அடிப்படையில் விவசாயிகளுக்கான நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு பயிற்சி நடத்தப்படுகிறது. தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் இரண்டு வேளாண் அலுவலர்கள், ஒரு நுகர்வோர் ஆர்வலருக்கு சென்னையில் ஏற்கனவே பயிற்சி வழங்கப்பட்டது. இம்மூவரும் சேர்ந்து அந்தந்த மாவட்டங்களில் தலா 150 விவசாயிகளுக்கு பயிற்சி வழங்க வேண்டும். இதன்படி, தமிழகத்தில் முதல் பயிற்சியாக தஞ்சையில் துவங்கியது. டி.ஆர்.ஓ., கருணாகரன் பயிற்சியை துவக்கி வைத்து பேசுகையில், ""விவசாயிகள் விழிப்புணர்வு பெற வேண்டும். அவர்களது உற்பத்தி மற்றும் பயன்பாட்டு பொருட்கள் மீது அவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக இப்பயிற்சி வழங்கப்படுகிறது. விவசாயிகள் நுகர்வோர் என்ற முறையில் தனக்கான குறையை தானே

நீதிமன்றம் அல்லது நேரடியாக முறையிட்டு இழப்பீடு அல்லது புதிய பொருளை பெற வாய்ப்பு ஏற்படும்," என்றார்.

சென்னையில் பயிற்சி பெற்ற நுகர்வோர் ஆர்வலர் சுந்தரவிமலநாதன் பேசியதாவது: விவசாயிகளுக்கான நுகர்வோர் சட்டங்களை நாம் எவ்வாறு கையாழ்வது, பாதிக்கப்பட்ட விவசாயிகள் இழப்பீட்டை எவ்வாறு பெறுவது என்பது குறித்து இங்கு வழங்கப்பட்ட கையேட்டில் உள்ளது. வக்கீல்கள் இன்றி விவசாயிகளே நுகர்வோர் நீதிமன்றம் அல்லது பாதிப்புக்கான நிறுவனத்தில் முறையிட்டு இழப்பீடு அல்லது புதிய பொருளை பெறலாம். இதற்காக விவசாயிகளுக்கு சட்டப்பயிற்சி வழங்கப்படும். தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் தலா 150 பேர் வீதம் நான்காயிரத்து 500 விவசாயிகளுக்கு இதுபோன்ற விழிப்புணர்வு பயிற்சி வழங்கப்படுகிறது.விவசாயிகள் பயன்படுத்தும் பூச்சிக்கொல்லி மருந்து, உரம், வேளாண் உபகரணங்கள், விதை மற்றும் பயிர் காப்பீடு போன்றவைகளில் இவர்களுக்கு ஏற்படும் பிரச்னைகளை அறிந்து அவர்களே முறையிட்டு இழப்பீடு பெறலாம். மற்ற விவசாயிகளுக்கும் இவர்கள் உதவியாக செயல்படலாம். இப்பயிற்சி முடிப்பவர்களுக்கு அரசு மூலம் கையேடு மற்றும் சான்றிதழ் வழங்கப்படும். இப்பயிற்சி தமிழகத்தில் முதலில் தஞ்சையில் நடக்கிறது. 18ம் தேதி கும்பகோணம் கோட்டப்பகுதிக்கு திருப்பனந்தாள் யூனியன் அலுவலகத்திலும், 25ம் தேதி பட்டுக்கோட்டை கோட்டப்பகுதி சேதுபாவாசத்திரம் யூனியனிலும் நடக்கிறது.இவ்வாறு அவர் பேசினார். மாவட்ட வழங்கல் அலுவலர் கனகராஜ், வேளாண் இணை இயக்குனர் முருகன், சென்னையில் பயிற்சி பெற்ற வேளாண் உதவி இயக்குனர் உதயகுமார், வேளாண் அலுவலர் சுப்பிரமணியன் ஆகியோர் பங்கேற்றனர்.

**நுகர்வோர் விழிப்புணர்வு பயிற்சி முகாமில் விவசாயிக்கு வேளாண் அலுவலர் அறிவுரை**

திருச்சி: ""விவசாயத்துக்கு அரசு வழங்கி வரும் சலுகைகளான மின்சக்தி, நீர்வளம் ஆகியவற்கை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும்," என்று திருச்சியில் நடந்த நுகர்வோர் விழிப்புணர்வு பயிற்சி முகாமில் வேளாண் உதவி இயக்குநர் கோமதி தங்கம் கூறினார். திருச்சி மாவட்ட அளவிலான விவசாயிகள் மற்றும் கிராமப்புற குழுக்களுக்கு நுகர்வோர் விழிப்புணர்வு பயிற்சி கலெக்டர் அலுவலகத்தில் நடந்தது. மாவட்ட வழங்கல் அலுவலர் வீரமணி துவக்கி வைத்து பேசியதாவது:விவசாயிகள் மற்றும் கிராமப்புற குழுக்களுக்கு தரமான பொருட்களை விளைவித்து சந்தைப்படுத்துவதற்கு போதிய நுகர்வோர் விழிப்புணர்வு தேவைப்படுகிறது. இந்தப்பயிற்சியை மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவகலம் சார்பில் அளிக்கப்படுகிறது.

விவசாயிகள் மற்றும் கிராமப்புற குழுக்கள் இந்த பயிற்சியை முறையாக பெற்றுக் கொண்டு வாழ்க்கையில் உயர வேண்டும் என்றார். திருச்சி உழவர் பயிற்சி நிலைய வேளாண் உதவி இயக்குநர் கோமதிதங்கம் பேசியதாவது:

விவசாயிகளுக்கு தரமான உணவு பொருட்களை உற்பத்தி செய்து நியாயமான விலையை பெற அரசு மின்சக்தி, நீர்வளம் உட்பட பல்வேறு சலுகைகளை வழங்குகிறது. இந்த மின்சக்தி மற்றும் நீர்வளத்தை விவசாயிகள் சிக்கனமான முறையில் பயன்படுத்தி பாதுகாப்பான உணவு மற்றும் நிலையான வகையில் உற்பத்தி செய்ய வண்டும் என்று பேசினார். அந்தநல்லூர் உதவி-இயக்குநர் அலுவலக வேளாண்மை அலுவலர் கலைராணி பேசியதாவது: உணவு பாதுகாப்பை பொறுத்தமட்டில் நுகர்வோர்களுக்கு பாதுகாப்பான மற்றும் சத்துள்ள உணவு வழங்க வேண்டும். இதற்கு உற்பத்தியில் ஈடுபடும் விவசாயிகள் போதிய அனுபவம் பெற்றிருக்க வேண்டும். குறிப்பாக உணவு பொருட்கள் உற்பத்தி செய்யும் முறை தெரிந்து வைத்திருக்க வேண்டும். செயற்கை உரங்கள் மற்றும் பூச்சிக் கொல்லி மருந்துகளால் உணவுகள் பாதுகாப்பற்ற நிலையுள்ளது. இதனால் விவசாயிகள் இயற்கை முறையில் விவசாயம் செய்து பாதுகபாப்பான உணவு பொருட்களை உற்பத்தி செய்ய முன்வரவேண்டும் என்றார்.
விவசாயிகள் உட்பட அனைத்து நுகர்வோர்களையும் பாதுகாக்கும் வகையில் அரசு உணவுபொருள் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை மூலம் தொடர்ந்து எடுத்து வரும் நடவடிக்கைகள் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புக்கான துறை அமைத்துள்ளது. இதன் மூலம் நிவாரண முறைகள் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புச்சட்டம், நுகர்வோர் உரிமைகள் கடமைகள், நுகர்வோர் உரிமைகள் பாதிப்புகுள்ளாகும் போது பெறக்கூடிய நிவாரணங்கள் மற்றும் அவற்றை வழங்கும் அமைப்புகள் விபரம் குறித்தும் மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் மற்றும் தன்னார்வ நுகர்வோர் ஆர்வலர் மூலம் விழிப்புணர்வு அளிக்கப்பட்டது. தொடர்ந்து கருத்துப்பொருள் விவாதம் நடந்தது.
விழிப்புணர்வு பயிற்சி முகாமில் பங்கேற்றவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டன.

---

### கீழப்பாவூரில் வேளாண்மை பொறியியல் பாசன நீர் மேலாண்மை திட்ட பயிலரங்கம்

திருநெல்வேலி:வேளாண்மை பொறியியல் துறை பாசன பகுதி நீர் மேலாண்மை திட்டம் பயிலரங்கம் கீழப்பாவூர் சமுதாய நலக் கூடத்தில் நடந்தது.தென்காசி உதவி செயற்பொறியாளர் மனோகரன் வரவேற்றார். வேளாண்மை பொறியியல் துறை தலைமை பொறியாளர் வஜ்ரம், பயிற்சியை துவக்கிவைத்து பேசினார். வேளாண் பொறியியல் துறை கண்காணிப்பு பொறியாளர் தமிழ்செல்வன், கீழப்பாவூர் டவுன் பஞ்., துணைத்தலைவர் பொன் அறிவழகன் முன்னிலை

வகித்தனர். வேளாண்மை பொறியியல் துறை செயற்பொறியாளர் ஜான் நிர்மலன், திட்டம் மற்றும் நீர் மேலாண்மை பற்றி விளக்கவுரை ஆற்றினார். தென்காசி உதவி செயற்பொறியாளர் ஆறுமுகநயினார், வேளாண்மை பொறியியல் துறை திட்டங்கள் மற்றும் மானியங்கள் பற்றி விளக்கம் அளித்தார். தென்காசி பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் எஸ்.கே.சுப்பிரமணி, பாவூர்சத்திரம் வேளாண்மை உதவி இயக்குனர் செந்தில்முருகன், மின்வாரிய செயற்பொறியாளர் பாஸ்கரன், செங்கோட்டை தோட்டக் கலை உதவி இயக்குனர் பாலசுப்பிரமணியன், நெல்லை கால்நடை மண்டல இணை இயக்குனர் ராமானுஜம், தொழில் நுட்ப கருத்தினை வழங்கினார்.வேளாண்மை இயந்திரங்கள் மற்றும் கருவிகள் செயல் விளக்கம் வழங்கப்பட்டது. சிற்றாறு பாசன பகிர்மான குழு தலைவர் கந்தசாமி, கருப்பாநதி பகிர்மான குழுத் தலைவர் ரத்தினவேல், புலியூர் கால்வாய் நீரினை பயன்படுத்துவோர் சங்கத் தலைவர் கோபாலசுப்பிரமணியன், திருச்சிற்றம்பலம் கால்வாய் நீரினை பயன்படுத்துவோர் சங்கத் தலைவர் அப்பாத்துரை, குண்டாறு பாசனம் நீரினை பயன்படுத்துவோர் சங்கத் தலைவர் பெரியசாமி விவசாயிகள் கருத்துக்களை வழங்கினர்.செயற்பொறியாளர் ஜான் நிர்மலன் பேசுகையில், "வேளாண்மை பொறியியல் துறை மூலம் குண்டாறு, சிற்றாறு, கருப்பாநதி பகுதியிலுள்ள நீரினை பயன்படுத்துவோர் சங்கத்திற்கு மேலாண்மை மானியமாக ரூ.35.1 லட்சம் வழங்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதை நீரினை பயன்படுத்துவோர் சங்கம் பெற்று பயன்பெற வேண்டும். உதவி செயற்பொறியாளர் சுப்பிரமணியன் நன்றி கூறினார்.பயிலரங்கில் ஆலங்குளம், பாவூர்சத்திரம், தென்காசி, செங்கோட்டை மற்றும் கடையநல்லூர் விவசாயிகள் கலந்து கொண்டனர். பாவூர்சத்திரம் உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர்கள், இளநிலைப் பொறியாளர்கள் செய்திருந்தனர்.

## உழவர் மன்ற உறுப்பினர்களுக்கு பயிற்சி

நீடாமங்கலம்: நீடாமங்கலத்தில் உழவர் மன்ற உறுப்பினர்கள் மற்றும் மகளிர் சுயஉதவிக் குழுவினருக்கு பயிற்சி முகாம் நடந்தது.
ஷீலா சமூக நல வாழ்வு சங்கம் சார்பில் நடந்த பயிற்சிக்கு இயக்குனர் மோகன்ராஜ் சுதாகர் தலைமை வகித்தார். முதல் நாள் தோட்டக்கலை உதவி அலுவலர் கண்ணையா உழவர்கள் பயிரிடக்கூடிய பயிர் வகைகள், மானிய விலை, தென்னை சாகுபடி செய்யும் விவசாயிகள் கையாள வேண்டிய வழிமுறைகள் குறித்து விளக்கினார். வேளாண் பொறியியல் துறை அலுவலர் அண்ணாதுரை ஆழ்குழாய் கிணறு அமைப்பது பற்றி விளக்கமளித்தார். வேளாண் உதவி அலுவலர் ரங்கநாதன் மற்றும் பலர் கலந்து கொண்டனர். 2ம் நாள் உழவர் பயிற்சி மைய இணை பேராசிரியர்

முருகன் ஆடு, மாடு, கோழி வளர்த்தல் முறை, அவற்றின் மூலம் கிடைக்கும் பயன்கள் பற்றி விளக்கினார். ஷீலா சமூக நல மைய ஒருங்கிணைப்பாளர் செல்வம் நன்றி கூறினார்.

**விவசாயிகளுக்கு விதை கிராம பயிற்சி**

வேலூர் : விவசாயிகளுக்கு விதை கிராம பயிற்சி கலவை கிழக்கு பள்ளியில் நடந்தது.நிகழ்ச்சிக்கு, வேளாண்மை உதவி இயக்குனர் முகமது அஸ்லாம் தலைமை வகித்தார். வேளாண்மை அலுவலர் லதா முன்னிலை வகித்தார். இதில், உதவி வேளாண்மை அலுவலர்கள், விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தனர். பயிற்சியில் தரமான விதை உற்பத்தி செய்தல், விதை நேர்த்தி செயல் விளக்கம், உயிர் உரங்கள், பூஞ்சாணம், ஆடோமோனாஸ், ப்ளுரன்ஸ் பயன்படுத்தி, விதை மூலம் நோய்களிலிருந்து பயிர்களை காத்திட செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது.

**விவசாயிகளுக்கு மானிய விலையில் சொட்டு நீர் பாசனக் கருவிகள்**

மயிலம் : மயிலம் ஒன்றியத்தில் தோட்டக் கலை வேளாண் துறை மூலம் 125 ஏக்கர் நிலத் திற்கு சொட்டு நீர் பாசன கருவிகள் வழங் கப்படுகிறது.இது குறித்து மயிலம் வட்டார தோட்டக் கலை துறை உதவி வேளாண்மை ஒலுவலர் சண்முகம் விடுத்துள்ள செய்திக்குறிப்பு:மயிலம் வட்டாரத்தில் கத்தரி, வெண்டை, பாகற் காய், பூ வகைகள், மா, வாழை பயிர்களை விவசாயிகள் பயிரிட்டுள்ளனர்.

மயிலம் ஒன்றியத் தில் இந்த ஆண்டு 125 ஏக்கர் பரப்பளவில் சொட்டு நீர் பாசனக் கருவிகள் மானிய விலையில் வழங்கப்படுகிறது. சொட்டு நீர் பாசன கருவிகள் வாங்க விருப்பமுள்ள விவசாயிகள் தங்கள் பங்கு தொகையாக 35 சதவீதம் செலுத்த வேண்டும். மீதமுள்ள 65 சதவீதம் அரசு விவசாயிகளுக்கு மானிய உதவி செய்கிறது. 35 சதவீதம் முன் பணம் செலுத்த முடியாத விவசாயிகளுக்கு தோட்டக் கலை துறை மூலம் வங்கி கடனுதவிகள் ஏற்பாடு செய்யப்படுகிறது. விவசாயிகள் 20 பேர் கொண்ட குழுக்களாகவும் சேர்ந்து துல்லிய பண்ணைகள் அமைத்து பயன் பெறலாம். இத்தகைய பண்ணை விவசாயிகளுக்கு எக்டேருக்கு 15 ஆயிரத்திற்கு அரசு மூலம் உரம் இலவசமாக வழங் கப்படும். மயிலம் ஒன்றி யத்தில் சொட்டு நீர் பாச னம் அமைக்க விரும் பும் விவ சாயிகள் கூட்டே ரிப் பட்டில் உள்ள வேளாண் விரிவாக்க அலுவல கத்தை அணுகலாம்.

வெளிமார்க்கெட்டில் பருத்தி விலை குறைவு

உடுமலை : வெளிமார்க்கெட்டில் பருத்தி விலை ஒரே வாரத்தில் குறைந்துள்ளதால்விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.உடுமலை மற்றும் சுற்றுப்பகுதிகளில் பயிரிடப்பட்டுள்ள பருத்தி அறுவடை கடந்த சில வாரங்களாக நடக்கிறது. செடியில் முதல் வெடிப்பு பருத்தி அறுவடை முடிந்து இரண்டாம் கட்ட பணிகள் தீவிரமடைந்துள்ளது.கிராமங்களுக்கு வியாபாரிகள் அதிகளவு வராததால் விவசாயிகள் பருத்தியை இருப்பு வைத்துள்ளனர். அறுவடை துவங்கிய போது மிக நீண்ட இழை உட்பட அனைத்து பருத்தி ரகங்களுக்கும் வெளிமார்க்கெட்டில் நல்ல விலை கிடைத்து வந்தது. இதனால், உள்ளூர் கொள்முதலிலும் நல்ல விலை கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் விவசாயிகள் இருந்தனர். இந்நிலையில், கடந்த சில நாட்களாக பருத்தியின் விலை குறைந்து வருகிறது. நடுத்தர இழை ரக பருத்தி விலை 400 ரூபாய் வரை குறைந்து 3,150 ரூபாய்க்கும், மிக நீண்ட இழை பருத்தி நூறு ரூபாய் குறைந்து 4,500 ரூபாய்க்கும், ஆர்.சி.எச்., ரகம் 3,450 ரூபாய்க்கும் வெளிமார்க்கெட்டில் கொள்முதல் செய்யப்படுகிறது. ஒரே வாரத்தில் பருத்தியின் விலை குறைந்துள்ளதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். மத்திய பருத்தி கழகம் கோவையில் துவங்கியுள்ள விற்பனை நிலையத்திற்கு தேவையான பருத்தியை விவசாயிகளிடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்ய வேண்டும். இதனால், விலை வீழ்ச்சி தடுக்கப்பட்டு விவசாயிகள் மீண்டும் பயிரிட ஆர்வம் காட்டுவார்கள் என விவசாய சங்கங்கள் சார்பில் மத்திய அரசுக்கு கோரிக்கை மனு அனுப்பப்பட்டுள்ளது.

தினமணி
Friday, February 12, 2010 9:44 AM IST

## நெல் பழ நோயால் 3,500 ஹெக்டேர் பயிர்கள் சேதம்

First Published : 12 Feb 2010 07:17:18 AM IST

Last Updated : 12 Feb 2010 08:57:34 AM IST

திருக்காட்டுப்பள்ளி, பிப். 11: தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர், கள்ளப்பெரம்பூர் வட்டாரங்களில் கரிப்பூட்டை நோய் (நெல் பழ நோய்) தாக்குதலில் சம்பா பயிர்கள் சுமார் 3,500 ஹெக்டேரில் பாதிக்கப்பட்டுள்ளதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

பூதலூர், திருக்காட்டுப்பள்ளி, செங்கிப்பட்டி, அகரப்பேட்டை மற்றும் தஞ்சாவூர் வட்டாரம் கள்ளப்பெரம்பூர், வண்ணாரப்பேட்டை, கரம்பயம், சிவகாமிபுரம், ஆலக்குடி உள்ளிட்ட பகுதிகளில் சுமார் 12 ஹக்டேரில் சம்பா நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இந்தப் பகுதிகளில் சுமார் 60 சத நெல் அறுவடை முடிந்துள்ளது.

மேற்காணும் பகுதிகளில் சுமார் 3,500 ஹெக்டரில் கோ 43, பிபிடி 5204 போன்ற நெல் ரகங்களில் நெல் பழ நோய் தாக்கியுள்ளது. இதுகுறித்து ஆலக்குடி அருகே கரம்பயம் பகுதி விவசாயி துரைராஜன் கூறியது:

இத்தகைய நோய்கள் அதிகம் பரவாது. கோ. 43 உள்ளிட்ட ரக நெல்லையே அதிகளவில் பாதித்துள்ளது. சாதாரணமாக, கடந்த 3 ஆண்டுகளாக ஏக்கருக்கு சுமார் 25 மூட்டைகள் வரை மகசூல் கிடைத்தது. இந்த நோயின் தாக்குதலால், அதிகபட்சமாக 10 மூட்டைகள் மகசூல் கிடைக்கும். மேலும், ஆலக்குடி எதிரே உள்ள சிவந்திநாதபும் முதல் கரம்பயம் வரை 90 சதப் பயிர்களை இந்த நோய் தாக்கியுள்ளது. அறுவடை இயந்திரம் மூலமாக சில வயல்களில் அறுவடை நடைபெறுகிறது. அறுவடையின்போது இந்த நோயின் தாக்குதலால் கரும்புகை எழுகிறது. ஆகவே, மாவட்ட நிர்வாகம் பாதிக்கப்பட்ட பகுதிகளை ஆய்வு செய்து, உடனடி நிவாரணம் வழங்க வேண்டும் என்றார் அவர். அதிகாரிகள் விளக்கம்: இந்த நோய்க்கான முக்கியக் காரணம், கடந்த தை மாதத்தில் சம்பா பயிர்கள் பூக்கும் பருவத்தில் 2 நாள் மழை பெய்ததே. மேலும், பனிப்பொழிவு வழக்கத்தைவிட அதிகமாகவும், இரவில் வெப்பநிலை மிகவும் குறைவாக இருந்தாலும் மேற்காணும் ரக நெல்லுக்குப் பாதிப்பு ஏற்படும்.

இதற்கான மருந்தாக, ஏக்கருக்கு 150 மில்லி வீதம் ரிசல்ட் என்ற மருந்தைத் தெளித்து ஓரளவு கட்டுப்படுத்தலாம். ஆனால், அறுவடை நேரத்தில் இதைத் தெளித்தால் நோயிலிருந்து எஞ்சிய நெல்லுக்கும் விஷத்தன்மை உண்டாக வாய்ப்பு உண்டு என்றனர் பூதலூர் வேளாண்மை விரிவாக்க அலுவலர்கள் கோ. ராமதாஸ், கே. காமராஜ் ஆகியோர்.

**அரசு நெல் கொள்முதல் நிலையங்களில் மூட்டைக்கு ரூ. 14 பிடித்தம்**

First Published : 12 Feb 2010 07:13:41 AM IST

சீர்காழி,பிப். 11: சீர்காழி பகுதியில் அரசு நெல் கொள்முதல் நிலையங்களில் நெல் மூட்டைக்கு ரூ. 14 பிடித்தம் செய்யப்படுகிறது என விவசாயிகள் புகார் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து சீர்காழி பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் தெரிவித்தது: கடந்த ஆண்டு இறுதியில் பெய்த பலத்த மழையால் அதிகம் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நாகை மாவட்டம், சீர்காழியும் ஒன்று. இந்த மழையால் சீர்காழி, கொள்ளிடம், மாதானம், கொண்டல், திருவெண்காடு, வைத்தீஸ்வரன்கோவில் உள்ளிட்ட பகுதிகளில் ஆறு, வாய்க்காலில் உடைப்பு ஏற்பட்டு, கதிர் வரும் நிலையிலும், கதிர் வந்து அறுவடைக்குத் தயராக இருந்த நிலையிலும், ஆயிரக்கணக்கான ஏக்கர்களில் பயிர்கள் நீரில் மூழ்கின.

மழை நின்ற பின்னரும் பயிரை காப்பாற்ற முடியாத சூழ்நிலை, அறுவடை செய்ய ஆள்கள் இல்லாமல் சிரமப்பட்டு, அறுவடை இயந்திரம் கொண்டு அறுவடை செய்து, பயிரை அரசு நெல் கொள்முதல் நிலையங்களுக்கு எடுத்துச் சென்றால் அங்கு 17 சதம் ஈரப்பதம் உள்ள நெல்லை மட்டுமே கொள்முதல் செய்கின்றனர்.

மேலும், சீர்காழி அருகேயுள்ள செம்மங்குடி, கடவாசல், ரயிலடி, வைத்தீஸ்வரன்கோவில் உள்ளிட்ட பல்வேறு அரசு கொள்முதல் நிலையங்களில் விவசாயிகளின் நெல்லைவிட, வியாபாரிகளின் நெல்லுக்கு அதிக முக்கியத்துவம் தரப்படுகிறது. நெல் தூற்றும் போதும் சரியாகத் தூற்றுவதில்லை, மூட்டையின் எடையைச் சரியாகப் போடுவதில்லை.

மேலும், மூட்டை ஒன்றுக்கு ரூ. 14 பிடித்தம் செய்யப்படுகிறது. பிடித்தம் குறித்து விளக்கம் கேட்டால், கொள்முதல் நிலையத்தில் வேலை பார்க்கும் ஆள்களுக்கு ஊதியம், மின் கட்டணம்,எனப் பல்வேறு காரணங்களைக் கூறுகின்றனர். இத்தகைய முறைகேடுகளில் ஈடுபடுவோர் மீது அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்துகின்றனர்.

## விவசாயிகளுக்கு வேளாண் அதிகாரி யோசனை

First Published : 12 Feb 2010 05:34:52 AM IST

சிவகங்கை,பிப்.11: சிவகங்கை மாவட்டத்தில், நெல் விதைகள் கலப்படமில்லாமல் இருக்க விவசாயிகள் இயந்திரங்கள் மூலம் அறுவடை செய்வதைத் தவிர்க்குமாறு வேளாண்மை இணை இயக்குநர் எஸ்.சுப்பிரமணியன் வேண்டுகோள் விடுத்துள்ளார். இது தொடர்பாக
அவர் கூறியது: சிவகங்கை மாவட்டத்தில் வரும் பருவத்துக்குத் தேவையான விதை நெல், ஆடுதுறை 39- 16 ஹெக்டேரிலும், பிபிடி 5204- 105 ஹெக்டேரிலும், ஆடுதுறை 45- 18 ஹெக்டேரிலும், ஏடிடி 36- 4 ஹெக்டேரிலும், கோ 43- 11 ஹெக்டேரிலும், ஏஎஸ்டி 16- 5 ஹெக்டேரிலும் விதைப்பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளது.
தற்போது விதைப் பண்ணைகளில் அறுவடைப் பணிகள் நடைபெற்றுவருகிறது. வரும் பருவத்துக்குத் தேவையான 450 மெ. டன் நெல்விதைகள் கொள்முதல் செய்யும் பணிகள் வேளாண்மைத் துறை மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. விதை உற்பத்தி செய்யும் விவசாயிகள் விதைப் பண்ணையில் அறுவடை செய்யும்போது, கதிர் அறுவடை செய்யும் கருவியைப் பயன்படுத்தாமல் அறுவடை செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
இதன் மூலம் பிற ரகங்கள் கலப்பு ஏற்படுவதைத் தவிர்க்கலாம். விதைகளை ஈரப்பதமின்றி மிதமான வெயிலில் உலர வைத்துப் புதிய கோணிப்பைகளில் அடைத்து சுத்திகரிப்பு நிலையத்துக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
நெல் விதைக்கிராமத் திட்டத்தில் நெல் விதை உற்பத்தி செய்துள்ள விவசாயிகளும் இம்முறையைக் கடைபிடிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
விதைக்கிராமத் திட்டத்தில் உற்பத்தி செய்த விதைகளைத் தங்கள் கிராமங்களில் உள்ள விவசாயிகளுக்கு வழங்கி இம்மாவட்டத்தில் அனைத்து விவசாயிகளும் தரமான சான்று பெற்ற விதைகளைப் பயன்படுத்தும் நிலையை உருவாக்குமாறு வேளாண்மை இணை இயக்குநர் கேட்டுகொண்டுள்ளார்.

### விவசாயத்தை நம்பியே நாடு உள்ளது

First Published : 12 Feb 2010 06:34:54 AM IST

அம்பாசமுத்திரம், பிப். 11: விவசாயத்தை நம்பியே நாடு உள்ளது. எனவே விவசாயிகள் தயங்க வேண்டியதில்லை என்று தமிழக சட்டப் பேரவைத் தலைவர் இரா. ஆவுடையப்பன் தெரிவித்தார்.
குபோடா நிறுவனம் சார்பில் கல்லிடைக்குறிச்சி அருகேயுள்ள கரம்பையில் வியாழக்கிழமை நவீன இயந்திரங்கள் கண்காட்சி மற்றும் செயல் விளக்க முகாம் நடைபெற்றது.

முகாமினை தொடங்கி வைத்த தமிழக சட்டப் பேரவைத் தலைவர் இரா. ஆவுடையப்பன் பேசியதாவது: அம்பாசமுத்திரம் பகுதியில் விவசாயம் அதிகளவில் செய்து வருகின்றனர். விவசாயிகளிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இதுபோன்ற நவீன இயந்திரங்கள் கண்காட்சி நடத்தப்பட்டு வருகிறது. விவசாயத்தை பிரதானமாக செய்து வருபவர்கள் தயங்க தேவையில்லை. உலகில் உணவு பற்றாக்குறை ஏற்பட்டு வரும் நிலையில் விவசாயத்தை நம்பியே நாடு உள்ளது. எனவே எதிர்காலத்தில் விவசாயம் இப்போதுள்ளதை விட செழித்து விளங்கும் என்பதில் ஐயமில்லை. தமிழகத்தில் தொழில்வளம் பெருகி வருகிறது.

இங்குள்ள விவசாயிகள் பயன்பெறும் வகையில் தான் அம்பாசமுத்திரம் அருகே கரும்பு ஆலை தொடங்கப்பட்டுள்ளது. நெல், வாழை பயிருக்கு மாற்றாக கரும்பு சாகுபடி செய்து விவசாயிகள் பயனடையும் வகையில் கரும்பு ஆலை கொண்டு வரப்பட்டுள்ளது.

விவசாயிகள் பயனடையும் வகையில் தமிழக அரசு பல்வேறுத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. எனவே விவசாயிகள் அரசின் திட்டங்களின் மூலம் பயன்பெற வேண்டும் என்றார் அவர்.

முகாமில், அம்பாசமுத்திரம் ஊராட்சி ஒன்றிய துணைத் தலைவர் இரா. சிவகுருநாதன், குபோடா நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் ஹயாசிமற்றும் ஏராளமான விவசாயிகள் பங்கேற்றனர்.

தினத் தந்தி DAILY THANTHI

**காபி வாரியத்தின் மறுமதிப்பீடு**

**காபி உற்பத்தி 3.9% குறையும்**

அருண் ஐயர்

பெங்களூர்

நடப்பு 2009–10–ஆம் ஆண்டு காபி பருவத்தில் (அக்டோபர்–செப்டம்பர்) உள்நாட்டில் காபி உற்பத்தி, முந்தைய மதிப்பீட்டிலிருந்து 3.9 சதவீதம் அல்லது 11,000 டன் குறையும் என காபி வாரியம் தெரிவித்துள்ளது. முதல் கட்ட மதிப்பீடு காபி வாரியம், பருவமழைக்குப் பிறகு மேற்கொண்ட முதல் கட்ட மதிப்பீட்டில், காபி உற்பத்தி 2.89 லட்சம் டன்னாக இருக்கும் என தெரிவித்திருந்தது. தற்போது இவ்வாரியம் மேற்கொண்ட மறுமதிப்பீட்டில், இது 2.78 லட்சம் டன்னாக குறையும் என கூறியுள்ளது.

காபி உற்பத்தியில் முதலிடத்தில் உள்ள கர்நாடக மாநிலத்தில், சிக்மகளூர், ஹசன் மற்றும் குடகு ஆகிய முக்கிய காபி மையங்களில் டிசம்பர் மாதத்தின் இறுதிப் பகுதியில் பெய்த அடைமழையால் காபி உற்பத்தி பாதிப்புக்குள்ளானது.

அராபிகா–ரோபஸ்டாகர்நாடக மாநிலத்தில் தற்போது அராபிகா காபி பயிர் சுமார் 60 சதவீதம் அறுவடை செய்யப்பட்டுள்ளது. அம்மாநிலத்தில், அராபிகா உற்பத்தியில் 15–20 சதவீதம் என்ற அளவில் கணிசமாக சரிவு ஏற்படும் என காபி வாரியத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இந்நிலையில் சிக்மகளூரில் அராபிகா உற்பத்தி 2,700 டன் குறையும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது, குடகு பகுதியில் 1,000 டன்னும், ஹசன் பகுதியில் 1,700 டன்னும் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. ரோபஸ்டா காபியைப் பொறுத்தவரை, ஒட்டுமொத்தத்தில் உற்பத்தி 6,000 டன் குறையும் என்று கணிக்கப்பட்டுள்ளது. பருவ மழை பருவ மழைக்கு முன்னர் மேற்கொண்ட ஆய்வில் காபி வாரியம், நாட்டின் காபி உற்பத்தி, நடப்பு பருவத்தில் 3.06 லட்சம் டன்னாக இருக்கும் என மதிப்பிட்டிருந்தது. பருவ மழைக்குப் பின்னர் இது 2.89 லட்சம் டன்னாக குறைக்கப்பட்டது. தற்போது அறுவடைப் பணிகள் நடைபெற்று வரும் நிலையில், மேலும் குறைந்து 2.78 லட்சம் டன்னாக இருக்கும் என மறுமதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.